National Shoora Council
ජාතික ශූරා සභාව தேசிய ஷூறா சபை
NSC
ජාතික උපදේශක සභාව | தேசிய ஆலோசனை சபை | The National Consultative Council
No : 80, Dematagoda Road, Colombo 09, Sri Lanka. | Mobile : +94 766 270 470 | Tel/ Fax : +94 114 546 546
Email : office@nationalshoora.com | Web : www.nationalshoora.com

2017.09.01 [பொது அறிவித்தல்]

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு!

**<u>வாக்காளர் பதிவு – 2017</u>**

2017 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் தேர்தல் ஆணைக்குழுவினால் கடந்த மாதங்களில் நடத்தப்பட்டு, அவை பற்றிய விபரங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. தாங்களது பெயர் விபரங்கள் முறையாகப் பதியப்பட்டுள்ளனவா என்பதை தத்தமது பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக அல்லது ஆணைக்குழுவின் இணையத்தளமான www.slelections.gov.lk இன் மூலம் உறுதி செய்துகொள்ள முடியும்.

அவ்வாறு தங்களது விபரங்கள் மேற்படி பதிவில் இடம்பெறாதவர்கள், எதிர்வரும் **06/09/2017** ஆம் திகதிக்கு முன்னர் அதுபற்றி **தத்தமது மாவட்ட தேர்தல்கள் காரியாலயங்களுக்கு** எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். கிராம உத்தியோகத்தர்களிடமுள்ள இதற்கான முறையீட்டு விண்ணப்பப்படிவத்தின் மூலம் அல்லது கடிதம் ஒன்றின் மூலம் இம்முறையீடுகளை மேற்கொள்ள முடியும். இதன் பிரதியொன்றை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்தல் சிறந்தது.

18 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகளாகிய ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், முதியோர்கள், நிரந்தர அல்லது தற்காலிக (கூலி வீடு) முகவரியில் வசிப்போர்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிப்போர் என அனைவரும் கட்டாயம் தமது வாக்குரிமையைப் பதிவுசெய்துகொள்ளவது அவசியமாகும்.

எனவே, மஸ்ஜித் நம்பிக்கையாளர் சபைகள், சமய மற்றும் சமூக அமைப்புக்கள், மற்றும் பிரதேச சமூக ஆர்வளர்கள் முன்நின்று தமது பிரதேச வாக்காளர்கள் அனைவரும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சரியான முறையில் பதிவுசெய்துகொள்வதற்கான வழிகாட்டல்களை வழங்குவதுடன், கிராம உத்தியோகத்தர்களுடன் இணைந்து இந்நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தேவையான பூரண ஆதரவையும் வழங்குமாறு தேசிய ஷூறா சபை பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றது.

உங்கள் பங்களிப்புக்கும், ஒத்துழைப்புக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் நட்கூலி வழங்குவானாக! ஆமீன்.

ஜஸாக்குமுல்லாஹ் ஹைரன்!

தாரிக் மஹ்மூத்
தலைவர், தேசிய ஷூறா சபை

NATIONAL SHOORA COUNCIL SRI LANKA

**குறிப்பு:** இப் பொது அறிவித்தலை மஸ்ஜித்களில் வாசித்து, மஸ்ஜித் அறிவித்தல் பலகைகளில் கட்சிப்படுத்துமாறும் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்